முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 100/2024

அ.சா.6

2026–ம் ஆண்டு ஜூலை 21–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி –6 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்லதுரை | தொழில் | |
| தந்தை பெயர் | மணி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.45 மணி,

Accused A1)Sanjay, A2)Arunkumar, A3)Mathiyalagan are present. Advocate Mrs.Arunadevi present for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் குட்டடப்பட்டி கிராமம், மாதநாயக்கன்பட்டியில் குடியிருந்து போட்டோகிராபராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 27.08.2023 ஆம் தேதி நானும் அ.சா.5 கார்த்தி என்பவரும் ஓமலூர் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம். அப்போது தொளசம்பட்டி ஏரி சர்ச் அருகே ஞானசேகரனும், அவரது மனைவியும் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அப்போது மாலை 06.00 மணி இருக்கும். அப்போது ஆஜர் எதிரிகள் இருசக்கர வாகனத்தில் ஞானசேகரன் சென்ற வண்டியின் மீது மேலே விடுவது போல் வந்தார்கள். அப்போது ஞானசேகரன் அவர்களை பார்த்து டேய் என சத்தம் போட்டார். அப்போது எதிரிகள் மூவரும் ஞானசேகரனை பார்த்து தேவிடியாக பையா என்று திட்டி அப்படிதான் போவோம் என்று சொன்னார்கள். அவர்களுக்குள் சண்டை ஆகிவிட்டது. இதுசம்மந்தமாக ஞானசேகரன் புகார் அளித்தார். பின்பு போலிசார் என்னை சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என்று விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.21 17:37:39 +0530

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் மனுதாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.50 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.21 17:37:42 +0530